1978 செப்டம்பர் 2]

அங்கத்தினர்களுக்கு அனுப்பிவைப்பதால், அந்தந்தத் துறையிலே அனுபவம் உள்ளவர்கள் அதிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டவும், நல்லவைகளைப் பாராட்டவும் முடியும். எனவே, இந்த ஆட்சி மொழிக் குழுவின் சார்பாக வெளியிடும் வெளியீடுகளை எல்லாம் அங்கத்தினர்களுக்கு அனுப்பும் உத்தேசம் உண்டா? இல்லையென்றால், இனிமேலாவது அனுப்புவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதுவரையிலே இந்தப் பழக்கத்தை யாரும் வைத்துக் கொண்டிருக்கவில்லை. அங்கத்தினர் அவர்கள் இப்போது இந்த யோசனை சொல்லியிருப்பதால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழக மானியக்குழு சம்பள விகிதங்கள்

* **விஞ எண் 45—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா: தனியர் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு U.G.C. scales of Pay கொடுக்க வேண்டும் என்று அரசு வற்புறுத்தி, மேற்படி நிர்வாகம் எழுத்து மூலமாக சம்மதம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டன என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசினரால் குறிப்பிடப்பட்டு, மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியர் நியமன வழிமுறைகள் ஆசிரியர்களுக்கான கல்வி யோக்யதாம்சங்களை ஏற்றுக்கொள்ளும் தனியார் கல்லூரி மற்றும் ஆசிரியர்கட்கு புதிய ஊதிய விகிதம் பொருந்தும் என்று ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சில தனியார் கல்லூரிகளிலே யூ.ஜி.சி. ஸ்கேல் இன்னும் கொடுக்கப் படவில்லை. தனியார் கல்லூரிகளுக்கு கிராண்டு கொடுக்கின்ற போது, அவர்கள் அங்குள்ள ஆசிரியர்களுக்கு இந்த யூ.ஜி.சி.

ஸ்கேலில் சம்பளம் கொடுக்கின்றார்களா என்ற விவரத்தைப் பரிசீலித்து, இந்த கிராண்டு கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இந்த யூ.ஜி.சி. ஸ்கேல் ஊதியம் தரவேண்டுமென்றுதான் அரசாங்கம் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த யூ.ஜி.சி. ஸ்கேல் தர வேண்டுமானால், சில நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் இஷ்டம்போல் ஆசிரியர்களை எடுப்பதோ, நியமிப்பதோ அல்லது பதவி உயர்வு தருவதோ முடியாது. இந்தக் காரணங்களால், இவைகளை இதுவரையிலே ஏற்றுக் கொள்ளாத கல்லூரிகளில் சில சங்கடங்கள் ஏற்பட்டுள்ளன. அதுபற்றி சட்டத் துறையோடு கலந்து, பரிசீலித்து வருகிறோம்.

(முற்பகல் 9-20)

திரு. கே. பண்ணை சேதுராம்: தனியார் கல்லூரிகளில் தங்களுடைய விருப்பத்திற்கேற்ப ஆசிரியர்களை நியமிப்பதும் நீக்குவதுமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்டால் மைனாரிடி வகுப்பினர் காலேஜ் என்று சொல்லி தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப் பவர்கள் நீக்கப்பட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலை இருக்கிறது. அந்த ஆசிரியர்களைப் பாதுகாக்க இந்த அரசு அந்தக் கல்லூரி நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போதிருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்தி அத்தகைய நிலைமைகளைத் தவிர்க்க அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது. இரண்டு நாட்களுக்கு முன்னதாக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள மசோதா ஆஸ்பத்திரிகள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றில் வேலை செய்கிறவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் அமைந்திருக்கிறது. அது வருமானால் இன்னும் கொஞ்சம் அதிகப் பாதுகாப்புக் கிடைக்கும்.

திரு. செ. சிவசாமி: ஒரு சில கல்லூரிகளில் நிர்வாகம் சீர் குலைந்த நேரத்தில் அவற்றை அரசு எடுத்து நடத்தியதன் காரணமாக நல்ல நிலையில் நிர்வாகம் நடந்து வருகிறது.

1978 செப்டம்பர் 2]

அவ்வாறு நல்ல நிலையில் நிர்வாகம் இருந்தால் மேலும் தொடர்ந்து அரசே நிர்வாகத்தை நடத்த முன்வருமா? உதாரணமாக சிவ கங்கை கல்லூரி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அந்தக் கல்லூரி நல்ல முறையில் நடைபெறத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. கோ. இளங்கோவன்: தனியார் கல்லூரிகளில் ஆசிரியர் களுக்கு வழகப்படும் சம்பளத்தில் அரசு எவ்வளவு மானியமாக வழங்குகிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கலைக் கல்லூரிகளைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய முழுமையான அளவுக்குத் தருகிருேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம்

*வினு எண் 46—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன், திரு. கா அப்புனு கவுண்டர், திரு. எம். அண்ணுமலை, டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமபுரி மாவட்டத்திற்கென இன்னும் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி (C.E.O.) அலுவலகம் திறக்கப் படாமல் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: இது பற்றி அரசு பரிசீலனையில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொல்லு கிருர்கள். இந்த மாவட்டம் தொடங்கி பத்தாண்டுகளுக்கு மேல் ஆகிறது. எப்போது தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகம் துவங்கப்படும்?